Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 5, 2025

புதன்கிழமை, 05 பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர்: 152 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# முன்னுதாரணமான “நாடாக நாம் மாறலாம்”

ஒருவேளை நீங்களும் நானும், நாம் அனைவரும் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கும், சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் தொடர்பிலான நவீன உலக அரசியலில் அழியாத முன்னுதாரணமாக நமது தாய்நாட்டை, இந்த இலங்கை நாட்டை மாற்றியமைப்பதற்கான பயணமாக இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இந்த உலகின் செல்வந்த நாடாக மாற முடியாது என்றாலும், நாம் முயற்சி செய்தால் இந்த உலகத்தில் வளமான தேசிய உயிர்ப்பைத் தாங்கிக் கொண்டிருக்கும் சமத்துவம் மற்றும் சுதந்திரத்திற்கான முன்னுதாரணமான நாடாக நாம் மாறலாம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் 77ஆவது சுதந்திர தினத்தின் பிரதான வைபவம், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், சுதந்திர சதுக்கத்தில் மிகவும் எளிமையான முறையில், கொண்டாப்பட்டது.

தேசிய கொடியை ஏற்றி வைத்ததன் பின்னர், நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

(முழுச் செய்தி P5)



## முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் விலைகள் அதிகரிக்கும்

நாட்டில் புதிய வரி திருத்தத்துடன் புதிதாக இறக்குமதி செய்யப்படும் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் விலைகள் அதிகரிக்கும் என இலங்கை மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் எண்ட்ரூ பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்படி 3 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று இறக்குமதி தடை தளர்த்தப்பட்டதுடன், விதிக்கப்பட்ட வரி காரணமாக 7 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ்

## 565 மில்லியன் ரூபாய் அன்பளிப்பை வழங்கியது ஜப்பான்



‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ், இலங்கையின் கழிவு முகாமைத்துவ கட்டமைப்பின் திறனை அதிகரிக்க ஜப்பான் 300 மில்லியன் யென் (565 மில்லியன் ரூபாய்) அன்பளிப்பை வழங்கியுள்ளது. இதற்கமைவான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் திங்கட்கிழமை (03) ஜப்பான் வெளிநாட்டு அலுவல்கள் பாராளுமன்ற உப அமைச்சர் சயமா (இகுஇனா) அகிகோ மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரால் கைசாத்திடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “அரசியலமைப்பை உடனடியாக இரத்து செய்க”

நாட்டில் தற்போதுள்ள ஊழல் நிறைந்த அமைப்பை மாற்றி, நாட்டிற்கு உண்மையான சுதந்திரத்தை கொண்டு வர, தற்போதைய அரசியலமைப்பை உடனடியாக இரத்து செய்து, புதிய அரசியலமைப்பை கொண்டு வருமாறு ஜனாதிபதியிடமும், தற்போதைய அரசாங்கத்திடமும் கேட்டுக்கொள்வதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை (04) காலை பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் நடைபெற்ற தேவ ஆராதனையில் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



தொடர்ச்சி P2



நாட்டின் 77ஆவது தேசிய சுதந்திர தினம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், சுதந்திர சதுக்கத்தில் செவ்வாய்க்கிழமை (04) கொண்டாடப்பட்டது. இதன்போது ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்ததைப் படத்தில் காணலாம்...

## முகக்கவசம் அணியுங்கள்



நாட்டின் பல பகுதிகளில் எதிர்வரும் சில நாட்களுக்கு காற்றின் தரமானது ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுவதால் முடிந்தவரை அனைவரும் முகக்கவசம் அணியுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## “ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கோட்டாபய கைதாகலாம்”



நாட்டில் கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே ஆகியோரை கைது செய்ய அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பிரசன்ன கமகே நற்சான்றிதழ் கடிதத்தை கையளித்தார்



நியூசிலாந்திற்கான இலங்கையின் முதல் வதிவிட உயர்ஸ்தானிகர் பிரசன்ன கமகே, ஜனவரி 31, 2025 அன்று நியூசிலாந்தின் ஒக்லாந்தில் உள்ள அரசு மாளிகையில் நடைபெற்ற நற்சான்றிதழ்களை வழங்கும் விழாவில், நியூசிலாந்தின் ஆளுநர் ஜெனரல் டேம் சிண்டி கீரோவிடம் தனது நற்சான்றிதழ் கடிதத்தை வழங்கினார்.

இந்த நிகழ்வு இலங்கை - நியூசிலாந்து இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள், இராஜதந்திர, வர்த்தகம்,

தொடர்ச்சி P2

## உப்பு இறக்குமதிக்கு அனுமதி



சந்தையில் பற்றாக்குறையாக உள்ள உப்பை இறக்குமதி செய்யத் தனியார்த் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உப்பு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகக் கடந்த டிசெம்பர் மாதம் 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது.

அதன்படி, ஜனவரி 31ஆம் திகதி வரை அரச துறைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கிய நிலையில், பெப்ரவரி 28ஆம் திகதி வரை குறித்த கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் தலைமையில் திங்கட்கிழமை (03) கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பிரசன்ன கமகே நற்சான்றிதழ் கடிதத்தை கையளித்தார்

விளையாட்டு, கல்வி, சுற்றுலா மற்றும் மக்களிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்துதலில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

இதன்போது இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அன்பான வாழ்த்துக்களை உயர்ஸ்தானிகர் கமகே தெரிவித்தார், மேலும் நியூசிலாந்துடனான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தினார்.

பலதரப்பு முயற்சிகளில் ஒத்துழைப்பதிலும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதிலும் நியூசிலாந்துடன் நெருக்கமாக பணியாற்ற இலங்கையின் ஆர்வத்தை அவர் வலியுறுத்தினார். இலங்கையின் சமீபத்திய அரசியல் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்தும் உயர் ஸ்தானிகர் கமகே ஆளுநர் ஜெனரலுக்கு விளக்கினார்.

ஆளுநர் ஜெனரல் டேம் கீரோ, உயர் ஸ்தானிகர் கமகேக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த நியூசிலாந்தின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

நியூசிலாந்தில் உள்ள இலங்கை சமூகத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார், மேலும் வெலிங்டனில் இலங்கை உயர் ஸ்தானிகராலயம் நிறுவப்பட்டதையும் வரவேற்றார்.

வெலிங்டனில் உயர் ஸ்தானிகராலயத்தை நிறுவுவதற்கான தளவாட ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் இறுதி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது விரைவில் பொதுமக்களுக்கு திறக்கப்படும்.

இந்த தூதரகம் நியூசிலாந்தில் இலங்கையின் இராஜதந்திர பிரதிநிதித்துவமாக செயல்படும், நியூசிலாந்துடனான மேம்பட்ட இருதரப்பு பொருளாதார ஈடுபாட்டை எளிதாக்கும் மற்றும் இலங்கையர்களுக்கு அத்தியாவசிய தூதரக சேவைகளை வழங்கும்.

தூதரகம் சீராக செயல்படுவதை உறுதி செய்வதற்கும் இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான உறவுகளை வளர்ப்பதற்கும் இலங்கை அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

இந்த மைல்கல், ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் தனது இராஜதந்திர எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் நியூசிலாந்துடனான கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கும் இலங்கையின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

உயர்ஸ்தானிகராலயத்தின் ஸ்தாபனம், இரு நாடுகளுக்கும் அவர்களின் மக்களுக்கும் பரஸ்பர நன்மைகளை வழங்கும் வகையில், ஒத்துழைப்புக்கான புதிய வழிகளைத் திறக்கும்.

உயர்ஸ்தானிகர் பிரசன்ன கமகே இலங்கை வெளியுறவு சேவையில் உறுப்பினராக உள்ளார். அவர் 1998இல் வெளியுறவு சேவையில் இணைந்ததுடன் 2019 முதல் 2022 வரை வியட்நாமிற்கான இலங்கை தூதராக பணியாற்றினார்.

# "அரசியலமைப்பை உடனடியாக இரத்து செய்க"

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

அரசியலமைப்பு எனப்படும் சர்வாதிகார அமைப்புக்கு வழி வகுத்த சட்ட கட்டமைப்பிற்குள் தலைவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதீத அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தனர். இதன் விளைவாக இனங்களுக்கு இடையே எளிதில் தீர்க்கப்படக்கூடிய கருத்து வேறுபாட்டை போராக மாற்றி, நாட்டில் ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கியது.

பின்னர் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்கள் 1990களில் இருந்து ஊடக ஒடுக்குமுறை, ஊடகவியலாளர்களை காணாமலாக்குதல், வெள்ளை வேன் கலாசாரம் மற்றும் எதிரிகளை சிறையில் அடைத்தல் போன்ற வன் செயல்களைச் செய்தனர்.

பேரழிவு தரும் போரினால் தாயகம் ஆழமான பொருளாதார வீழ்ச்சியில் மூழ்கியது. அத்துடன், கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்தப் போக்கு தீவிரமடைந்துள்ளது.

மேலும், நாட்டில் தற்போதுள்ள ஊழல் நிறைந்த அமைப்பை மாற்றி, நாட்டிற்கு உண்மையான சுதந்திரத்தை கொண்டு வர, தற்போதைய அரசியலமைப்பை உடனடியாக இரத்து செய்து, புதிய அரசியலமைப்பை கொண்டு வருமாறு ஜனாதிபதியிடமும், தற்போதைய அரசாங்கத்திடமும் கேட்டுக்கொள்வதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

# முகக்கவசம் அணியுங்கள்

இதன்படி செவ்வாய்க்கிழமை (04) முதல் காற்றின் தரக் குறியீடு 85 முதல் 128ற்கு இடைப்பட்ட அளவில் இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் வவுனியா, நுவரெலியா, புத்தளம், முல்லைத்தீவு, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களில் காற்றின் தரக் குறியீடு மிதமான மட்டத்தில் காணப்படும் என தெரிவித்துள்ளது.

இதற்கமைய தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, முடிந்தவரை அனைவரும் முகக் கவசங்களை அணியுமாறும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது.

# விலைகள் அதிகரிக்கும்

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட முச்சக்கர வண்டி ஆறரை இலட்சம் ரூபாவால் அதிகரிக்கக் கூடும். அதேநேரம், இரண்டு அல்லது 3 மில்லியன் ரூபாய்களுக்கு இருந்த வாகனங்கள், 7 மில்லியன் ரூபாய் வரைக்கும் அதிகரித்துள்ளது.

இறக்குமதி தடை நீக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு வகையான வரிகள் அமுலாக்கப்படுகின்றன. இதன் காரணமாக வாகனங்களின் விலைகள் 160 முதல் 260 சதவீதம் வரையில் அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போதைய நிலையில், வாகனங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் பொதுமக்கள் தங்களது நிதிநிலைமைகளைக் கருத்திற் கொண்டே தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வரி அதிகரிப்பானது தற்போதைக்கு குறைக்கப்படாது என்று அரசாங்கம் தங்களிடம் தெரிவித்திருப்பதாகவும் சிலோன் மோட்டர் டிரேடர்ஸ் ஒழுங்கமைப்பின் தலைவர் என்ரூ பெரேரா கூறியுள்ளார்.

# 565 மில்லியன் ரூபாய் அன்பளிப்பை வழங்கியது ஜப்பான்



இந்த அன்பளிப்பின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு முகாமைத்துவத் திறனை மேம்படுத்துவதற்காக கழிவுப் போக்குவரத்துக்காக 28 கம்பெக்டர் வாகனங்கள் வழங்கப்படும், அதில் 14 வாகனங்கள் மேல் மாகாணத்திற்கும், 08 வாகனங்கள் கிழக்கு மாகாணத்திற்கும், 06 வாகனங்கள் வடக்கு மாகாணத்திற்கும் வழங்கப்படும்.

தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் காரணமாக உலக நாடுகளின் முதலீடுகள் இலங்கையை நோக்கி வருகின்றதென சுட்டிக்காட்டிய, ஜப்பானின் வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பிலான பாராளுமன்ற உப அமைச்சர் சயமா (இகுஇனா) அகிகோ, தெரிவித்துள்ளார். அரசாங்கம் முன்னெடுக்கும் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானிய பிரதமரின் வாழ்த்துச் செய்தியையும், உப அமைச்சர் இதன்போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் வழங்கியுள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்த ஜப்பானிய அரசாங்கம் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நன்றி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டம் எவ்வித பாதிப்பும் இன்றி தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் என வலியுறுத்திய ஜனாதிபதி, ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பித்தமைக்காகவும், கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டில் வழங்கிய ஆதரவிற்கும் ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், அதிகளவான இலங்கைத் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கிய ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, அந்த வாய்ப்புகளை மேலும் அதிகரித்துக்கொள்ள ஒத்தழைப்பு வழங்குமாறும், இலங்கையின் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தும் உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்த தலையீடு செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே, ஜப்பான் தூதுவர் அகியோ இஸொமாடா (Akio ISOMATA), ஜப்பான் வெளிநாட்டு அலுவல்கள் பாராளுமன்ற உப அமைச்சரின் செயலாளர் சைட்டோ ஜூன் (SAITO Jun), ஜப்பானிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தென்மேற்கு ஆசியப் பிராந்தியத்தின் பணிப்பாளர் முரோதானி மசகத்சு MUROTANI Masakatsu, வெளிநாட்டு உதவித் திட்டமிடல் II ஆம் பிரிவு பணிப்பாளர் ஹிரோஷி அகிகோ (HIROSE Akiko), தென்மேற்கு ஆசியப் பிரிவின் பிரதி பணிப்பாளர் இவாசே கிச்சிரோ (IWASE Kiichiro) ஆகியோர் இதன்போது கலந்து கொண்டுள்ளனர்.

# "ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கோட்டாபய கைதாகலாம்"

ஊடக சந்திப்பு ஒன்று திங்கட்கிழமை (03) இடம்பெற்றுள்ளது. இதில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அரசாங்கம் ஆரம்பத்தில் உண்மையான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்ததாகவும் எனவும் கூறியுள்ளார்.

எனினும், நிர்வாகத்தில் உள்ள சில நபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், பொதுமக்களைத் தவறாக வழிநடத்த ஒரு மாற்றுக் கதை உருவாக்கப்படுவதாக கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

உண்மையிலேயே பொறுப்பானவர்கள் இன்னும் நிர்வாகத்திற்குள் இருப்பதால், ஒரு புதிய பிரதான சூத்திரதாரியை உருவாக்குவதற்கான திட்டத்தில் அரசாங்கம் இப்போது ஈடுபட்டுள்ளதாக கம்மன்பில ஆதாரம் எதுவுமின்றி கூறியுள்ளார்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக முன்னாள் புலனாய்வுத் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் குறிவைக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நன்மை பயக்கும் வகையில் இலங்கையின் புலனாய்வுப் பிரிவு ஈஸ்டர் குண்டுவெடிப்புகளைச் செய்தது என்ற தவறான கூற்றை நிறுவுவதே இதன் நோக்கம் என்று கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி, விமானப்படையின் முன்னாள் தளபதி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஆகியோர் உள்ளிட்ட மூவர் கொண்ட ஜனாதிபதி விசாரணைக் குழுவை கம்மன்பில மேற்கோள் காட்டியுள்ளார்.

இலங்கையின் புலனாய்வு அமைப்புகளைக் குண்டு தாக்குதல்களுடன் இணைக்கும் வகையில் இங்கிலாந்தைச் சேர்ந்த சேனல் 4 ஆவணப்படம் செய்த குற்றச்சாட்டுகளை அந்த குழு நிராகரித்ததாக உதய கம்மன்பில கூறியுள்ளார்.

அரசாங்கம் அறிக்கையைப் புறக்கணித்து தவறான கதையை முன்வைப்பதாக கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசாங்க சதித்திட்டத்தில் முக்கிய சாட்சியாகக் கூறப்படும் அசாத் மௌலானா, மோசடி மற்றும் அடையாள மோசடி உள்ளிட்ட பல குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், மௌலானாவின் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளைக் கட்டுப்படுத்துவதோடு புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக வாக்குமூலம் பெறுவதற்காக அவர் இலங்கைக்குத் திரும்புவதற்கு அரசாங்கம் உதவுகின்றது.

மௌலானாவின் வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குவது, பொலிஸ் விசாரணைகளில் அரசியல் தலையீடு இருப்பதாகக் கூறப்படுவது மற்றும் ஈஸ்டர் தாக்குதல்களின் விவரிப்பை மாற்றுவதற்கான முயற்சிகள் குறித்து தெளிவுபடுத்தக் கோரி, அரசாங்கம், காவல்துறை ஊடகப் பேச்சாளர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளிடம் PHU தலைவர் எட்டு கேள்விகளை எழுப்பினார்.

"இந்த அழுத்தம் குறித்து அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அல்லது காவல்துறை ஊடகப் பிரிவிலிருந்து உடனடி பதில்களை நாங்கள் கோருகிறோம்," என்று உதய கம்மன்பில கூறினார்.

260க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தும் வந்த 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு, இலங்கையில் அரசியல் ரீதியாக ஒரு உணர்திறன் மிக்க பிரச்சினையாகவே உள்ளது, பொறுப்புக்கூறல் தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றார்.

# பதில் பொலிஸ் மா அதிபரின் விசேட சுற்றறிக்கை



முறைப்பாடு அளிப்பதற்கு பொலிஸ் நிலையங்களுக்கு வருகை கரும் தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்க மறுக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, ஒழுக்காற்று நடவடிக்கைக்கு மேலதிகமாக, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு அளிக்க வருகை தரும் தரப்பினரிடம், முறைப்பாடுகளை ஏற்காமல், பல்வேறு காரணங்களைக் கூறி நிராகரிக்கப்படுவதாக எழுத்துப்பூர்வமாகவும், வாய்மொழியாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்களும் பிற அதிகாரிகளும் இத்தகைய மறுப்புக்கு பல்வேறு காரணங்களை முன்வைப்பதாக தகவல்கள் வந்துள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்குப் பதிவாகும் முறைப்பாடுகளை பதிவு செய்து விசாரணை செய்வது பொலிஸ் அதிகாரிகளின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

அதன்படி, இனிமேல், பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கும் எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்க முடியாது என்றும் பதில் பொலிஸ் மா அதிபர் வெளியிட்ட சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுதந்திர தின விழாவில் ஏராளமான எதிர்க்கட்சியினர் பங்கேற்பு



நாட்டில் செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற சுதந்திர தின விழாவில் ஏராளமான எதிர்க்கட்சி எம்.பிக்கள் பங்கேற்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக, பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, சமிந்திரனி கிரியெல்ல, வி.ராதாகிருஷ்ணன், ரவி கருணாநாயக்க உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# உப்பு இறக்குமதிக்கு அனுமதி

அதன்படி, இதுவரை அரச துறைக்கு மட்டுமே உப்பு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், தனியார்த் துறைக்கும் உப்பு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலுக்குப் பின், உப்பு இறக்குமதியால் சந்தையில் உப்பின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அந்த சங்கத்தின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும், சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக உப்பு விலை அதிகரித்திருந்தாலும், இறக்குமதி காரணமாகச் சந்தையில் உப்பு விலையில் அதிகரிப்பு ஏற்படாது என இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சுதந்திர தினத்தை கரி நாளாக பிரகடனப்படுத்தி ஆர்ப்பாட்டம்

பேரின்பராஜா சபேஷ்



இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் தேசத்தின் கரி நாளாக பிரகடணப்படுத்தி வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மட்டக்களக்பு செங்கலடியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை செவ்வாய்கிழமை (04) முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கரி நாளாக அனுஷ்டித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த உறவுகள் இணைந்து கவனயீரப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அமைப்பாளர் த.சுரேஷ், சிவில் அமைப்பு பிரதிநிதிகள் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இரா. சாணக்கியன் மற்றும் இ.சிறிநாத், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர் வங்கத்தின் மட்டக்களப்பு தலைவி அ.அமலநாயகி உட்பட ஏழு பேருக்கு மட்டக்களப்பு நீதிமன்ற நியாதிக்க எல்லைக்குள் பேரணி நடத்துவதற்கு நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக செங்கலடி நகரில் கவனயீர்ப்பு பேரணி நடைபெற்றது.

செங்கலடி பதுளை வீதியிலுள்ள சித்தி விநாயகர் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி பிரதான வீதியூடாகச் சென்று கொம்மாதுறை விநாயகர் ஆலயத்தில் முடிவடைந்தது.

ஆலய முன்றலில் வீதியோரம் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏற்தி இறுதி யுத்தத்தின் போது பாதுகாப்பு தரப்பினரிடம் கையளித்த உறவுகள் எங்கே, கடத்தப்பட்ட உறவுகள் எங்கே, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே, காணாமல் போனோருக்கான அலுவலகம் வேண்டாம், அநுர அரசே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுத்தா, நில ஆகிகரமிப்பை உடனடியாக நிறுத்து, ஊடக சுதந்திரத்தை உறுதி செய், தமிழர் தாயகத்தில் பௌத்த அடையாளங்களை நிறுவாதே போன்ற கோசங்களையெழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் ஆலய முன்றலில் சிதறு தேங்காய் உடைத்து ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்துள்ளனர்.

# விளையாடிக் கொண்டிருந்த இளைஞன் மீது தாக்குதல்



க.அகரன்

வவுனியா, தவசிகுளம் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் வைத்து இளைஞர் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் செவ்வாய்க்கிழமை (04) தெரிவித்துள்ளனர்.

வவுனியா, தவசிகுளம் பகுதியில் இரண்டு அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போது குறித்த மைதானத்திற்குள் வந்த சிலர் விளையாட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதுடன், விளையாட்டு நிகழ்வில் வழங்கப்படவிருந்த வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் கதிரைகளையும் உடைத்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு பெறப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# 92 இலட்சம் ரூபாய் மோசடி; இளைஞன் கைது

கனகராசா சரவணன்



ருமேனியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு வேலை பெற்றுத் தருவதாக தலா 16 இலட்சம் ரூபாயாக 12 பேரிடம் ஒரு கோடியே 92 லட்சம் பணத்தைப் பெற்று மோசடியில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு முகவர் நிலைய உரிமையாளரான மூதூரைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவர் திங்கட்கிழமை (3) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் கல்முனை வீதியில் சட்டவிரோதமாக இயங்கிவந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலைய உரிமையாளர் முகநூல் ஊடாக ருமேனியா, போலாந்து, சோபியா போன்ற நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் வேலை வாய்ப்பு உள்ளதாக விளம்பரம் செய்துள்ளார். இதனையடுத்து வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெறுவதற்காகப் பலர் நேரடியாகக் குறித்த முகவர் நிலையத்துக்குச் சென்று விண்ணப்படிவங்களை நிரப்பி கடவுச்சீட்டுகளின் பிரதிகள் மற்றும் பொலிஸ் நற்சான்று பத்திரங்கள் உட்பட ஆவணங்களுடன் 12 பேர் தலா 16 லட்சம் ரூபாய் பணத்தை 2023ம் ஆண்டில் வழங்கியுள்ளனர்.

பின்னர் அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பாது நீண்டகாலமாக இழுத்தடித்து வந்துள்ள நிலையில் பணத்தை வழங்கியவர்கள் பணத்தைத் திருப்பி தருமாறு கேட்ட நிலையில் அதனை வழங்காததையடுத்து அவருக்கு எதிராகச் சிலர் மட்டக்களப்பு விசேட புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடு செய்ததுடன் கொழும்பில் உள்ள அரச வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் 12 பேர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்து வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவு பணிப்பாளர் கபில கருணாரத்தின தலைமையிலான குழுவினர் திங்கள்கிழமை (03) பகல் குறித்த வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது அந்த முகவர் நிலையம் பதிவு செய்யப்படாமல் போலியாக இயங்கி வந்துள்ளமை தெரியவந்துள்ளதுடன் ருமேனியா, போலாந்து, சோபியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக 74 பேரிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்கள் அடங்கிய 74 பையில்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விசாரணையின் பின்னர் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த முகவர் நிலையம் தொடர்பாக முகநூல் விளம்பரத்தைப் பார்த்து வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 70க்கும் மேற்பட்டவர்கள் தலா 16 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனைவி கொடூரமாக கொலை; பொலிஸில் சரணடைந்த கணவன்



தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த பின்னர் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (04) அதிகாலை சரணடைந்த ஒருவர் தொடர்பில் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி, செம்ரோக் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 46 வயதுடைய கயானி தில்ருக்ஷி குமாரி என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவனுடன் அடிக்கடி ஏற்பட்ட முரண்பாடு காரணமாகக் குறித்த பெண் தனது மகளின் வீட்டில் தங்கியிருந்த நிலையில், கொழும்பில் உள்ள ஒரு ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்தும் வந்துள்ளார். திங்கட்கிழமை (03) அன்று நவலப்பிட்டிக்கு வந்து அங்கு நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று தனது மகளின் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (04) அதிகாலை 1.30 மணியளவில், குறித்த பெண்ணின் கணவன் ஜன்னல் வழியாக வீட்டுக்குள் இரகசியமாக நுழைந்து, அறையில் தூங்கிக் கொண்டிருந்த தனது மனைவியைக் கத்தியால் குத்தியதாகவும், அவரிடமிருந்து தப்பிப்பதற்கு வீட்டை விட்டு வெளியே ஓடிய போதும், அவரை பின் தொடர்ந்து மீண்டும் கத்தியால் தாக்கி தலையில் கல்லால் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தனது தாயைக் காப்பாற்றச் சென்ற மகளும் காயமடைந்துள்ளதுடன், குடும்பத் தகராறின் விளைவாக இந்தக் கொலை நடந்துள்ளதாகவும், இறந்த பெண்ணும் சந்தேக நபரான கணவரும் சிறிது காலமாகப் பிரிந்து வசித்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# முதலாவது பிரதமரின் சிலைக்கு மலர் அஞ்சலி



நாட்டின் 77ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களுடன் இணைந்து, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் உள்ள முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூர்யாவின் தலைமையில் செவ்வாய்க்கிழமை (04 ) நடைபெற்றது.

மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசூப் அசம்ப்ஷன் மற்றும் கொழும்பு மாநகர சபை மாநகர ஆணையர் பாலித நாணயக்கார ஆகியோர் சிலைக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். விருந்தினர்கள் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்



# சமாதானத்திற்காக துஆ பிரார்த்தனை

அஷ்ரப் ஏ சமத்



இலங்கையின் 77ஆவது சுதந்திர தினமான செவ்வாய்க்கிழமை(4) அனறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இஸ்லாமிய மத வழிபாடுகளும் பள்ளிவாசலில் முன்றலில் தேசியக் கொடியேற்று வைபவம் வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகப் பிரதி சபாநாயகர் வைத்தியர் றிஸ்வி சாலிஹ், (பா.உ), மற்றும் பிரதியமைச்சர் முனீர் முலாபர் (பா.உ) முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பணிப்பாளர் எம்.நவாஸ், மற்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா செயலாளர் அஷ்ஷேக் அர்க்கம், வெள்ளவத்தை பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர்கள் பிரதேச வாசிகள் உலமாக்கள். ஏனைய பள்ளிவாசல்கள் தலைவர்கள் மதரஸா மாணவர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொழும்பு பிரதேச செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள். அத்துடன் நாட்டுக்காகவும் சுதந்திரம், சமாதான வாழ்க்கைக்காக துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.









# அன்பு எல்லா வேறுபாடுகளையும் விடப் பெரியது

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம், புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், சுதந்திர சதுக்கத்தில், பெப்ரவரி 4ஆம் திகதி மிகமிக எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது. எவ்விதமான துணை வாகனங்களும் இன்றி, மூன்று பொலிஸ் மோட்டார் சைக்கிள்கள் முன்னே வர, தனியான வாகனத்தில் வந்திறங்கினார்.

சுதந்திரம் அடைந்து 77 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், நாம் இன்னும் தன்னிறைவு பெற்ற, வளமான மாநிலமாக உருவெடுக்கப் பாடுபடுகிறோம், ஆனால், அந்த இலக்குகளை அடைய முடியவில்லை. 77ஆவது சுதந்திர தினத்தின் எளிமையான ஏற்பாடுகள், 76 ஆண்டுகளாக இடம்பெற்றிருந்தால் பெருந்தொகை மிஞ்சியிருக்கும்.

கடந்த 77 ஆண்டுகளில், இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் தங்க எழுத்துக்களால் எழுதப்பட்ட பக்கங்களை விட, இரத்தத்தாலும் கண்ணீராலும் வரையப்பட்ட அசிங்கமான பக்கங்கள்தான் அதிகம். நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலிருந்து, இந்த நாடு ஒரு புதிய பாதையில் செல்வதை மக்கள் எதிர்பார்த்திருந்தனர் என்பது தெளிவாகிறது. இது புதிய அரசாங்கத்தின் முதல் சுதந்திர தின கொண்டாட்டமாகும்.

நாம் பெற்ற சுதந்திரத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, பல முக்கியமான விடயங்கள் தெளிவாகின்றன. மிக முக்கியமான விடயம் என்னவென்றால், 1948 பெப்ரவரி 4, அன்று, பிரிட்டிஷ் முடியாட்சியின் கீழ் ஒரு டொமினியனாக இருப்பதற்கான சுதந்திரம் மட்டுமே நமக்கு வழங்கப்பட்டது. 1972 அரசியலமைப்பு இலங்கையை ஒரு குடியரசாக நிறுவியது. அதிலிருந்து நாம் பெற்ற டொமினியன் அந்தஸ்து கணிசமாக மாறியிருந்தாலும், நாட்டின் இறையாண்மைக்கு நாம் இன்னும் உறுதி பூண்டுள்ளோம்.

நாங்கள் சில பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். 1978 அரசியலமைப்பு நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தி புதிய தேர்தல் செயல்முறைகளை அமல்படுத்திய போதிலும், எழுந்துள்ள பிரச்சினைகள் இன்னும் முறையாகத் தீர்க்கப்படவில்லை. புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பாக சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தாலும், புதிய அரசாங்கம் அதைப் பற்றி அலட்சியமாக இருப்பதாகத் தெரிகிறது.

'அழகான வாழ்க்கையும் வளமான நாடு' தான் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையின் கருப்பொருள். புதிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட 'தூய்மையான இலங்கை' திட்டத்தின் மூலம் குறைந்தபட்சம் ஓர் அழகான இலங்கையை உருவாக்க முயற்சி எடுத்திருக்கிறோமா?

"அன்பு எல்லா வேறுபாடுகளையும் விடப் பெரியது" என்ற மேற்கோள் இந்த நாட்டில் எழ வேண்டிய தேசிய ஒற்றுமையை வலியுறுத்துகிறது. நம் நாட்டு மக்களிடையே ஒருவருக்கொருவர் கட்டமைக்கப்பட வேண்டிய அன்பின் பிணைப்பும், அனைத்து வேறுபாடுகளையும் ஒதுக்கி வைக்கும் ஒற்றுமையும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வளங்களும் வாய்ப்புகளும் ஒருவருக்கொருவர் நியாயமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்த நல்லிணக்கத்தை முதன்மையான குறிக்கோளாகக் கொண்டு நமது நாட்டின் வளர்ச்சிப் பாதையை வகுக்க வேண்டும்.

இன்றைய சமூகத்திலிருந்து நீக்கப்பட வேண்டிய பல பிரிவுகள் உள்ளன. பல முரண்பாடுகள் உள்ளன. பல இன, பல மத, பன்மொழி நாடு என்பதால், அந்நாட்டில் வசிப்பவர்களிடையே பல்வேறு கலாச்சார வேறுபாடுகள் உள்ளன. இத்தகைய பண்புகளை வேறுபாடுகளாகக் கருத முடியாது. அந்த அடையாள இயல்பு ஒருவருக்கொருவர் அலட்சியம், குறைத்து மதிப்பிடுதல் அல்லது கவனக்குறைவு அல்லது தவறான புரிதலை ஏற்படுத்தத் தொடங்கும் போது அந்தப் பண்புகள் வேறுபாடுகளாக மாறும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# 350 கோடி ரூபா பெறுமதியான அரச விடுதியில் வாழும் ஆசை



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக்கு நியாயமற்ற முறையில் வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளைப் பற்றி கடந்த மாதம் 19ஆம் திகதி களுத்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

ஒவ்வொரு முன்னாள் ஜனாதிபதிக்கும் அல்லது அவரது விதவை மனைவிக்கும் அவரவருக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் படி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக 60 அதிகாரிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அது போதாது என்று அவர் அடம் பிடிப்பதாக இருந்தால் அந்த 60 பேரையும் நீக்கிவிடுவதாக எச்சரித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதியை அரச மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளதாகவும் அதன்படி, மஹிந்த ராஜபக்ஷ வைத்திருக்கும் அரச விடுதியின் பெறுமதி 350 கோடி ரூபாய் எனவும் அதனை சுற்றியுள்ள ஒரு ஏக்கர் காணியை இன்னமும் மதிப்பீடு செய்யவில்லை எனவும் அவ்வீட்டை வாடகைக்கு விடுவதாக இருந்தால் மாதாந்தம் 46 இலட்சம் ரூபாவுக்கே வாடகைக்கு விட வேண்டும் என்று மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

அந்த வீடு 30,500 சதுர அடி பரப்புள்ளதாகவும் அதனைப் புதுப்பிக்க மஹிந்த பொது மக்களின் பணத்தில் 47 கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி அனுரகுமார, ஜனாதிபதிகளின் உரிமைச் சட்டத்தின் படி, அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வாடகையின்றி பொருத்தமான ஒரு வீட்டை வழங்க வேண்டும் அல்லது அவரது சம்பளத்தில் மூன்றில் ஒன்றுக்குச் சமமான ஒரு தொகை வீட்டு வாடகையாக மாதாந்தம் அவருக்கு வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வீட்டு வாடகை வழங்குவதாயின் அவரது மாதச் சம்பளத்தின் படி அவருக்கு 30,000 ரூபாவே வழங்க வேண்டும் என்பதால் 46 இலட்சம் ரூபாய் வாடகை பெற வேண்டிய, தற்போது அவர் இருக்கும் வீட்டை விட்டு அவர் வெளியேற வேண்டும் அல்லது மாதாந்தம் 46 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி அக்கூட்டத்தில் கூறினார்.

இந்த விடயங்களைத் தனியார் தொலைக்காட்சியொன்றினால் நடத்தப்பட்ட நேர்காணலொன்றிலும் குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஓய்வு பெற்ற ஜனாதிபதி என்ற வகையில் அரச வீடொன்றை பெற முயலவில்லை என்று கூறி அதற்காக ரணிலுக்கு நன்றி தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் விதவை மனைவியான ஹேமா பிரேமதாசவும் புதிய அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் தொடர்பான முடிவை எடுத்தவுடன் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருந்த அரச வீடுகளிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் அங்குத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அரச இல்லங்களில் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகிய முன்னாள் ஜனாதிபதிகள் மூவர் மட்டுமே தங்கியுள்ளனர். அரசியல் என்பது மக்கள் சேவையாக வேண்டுமேயல்லாமல், பொது மக்களின் பணத்தில் கோடிக்கணக்கு ரூபாய் செலவில் நியாயமற்ற சலுகைகளைப் பெறும் வியாபாரமாகக் கூடாது என்பது தேசிய மக்கள் சக்தி நீண்ட காலமாக வலியுறுத்தி வரும் விடயமாகும். அதன் அடிப்படையில், எம்.பிக்கள் உள்ளிட்ட ஓய்வு பெற்ற அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் இரத்துச் செய்யும் திட்டத்தின் கீலேயே முன்னாள் ஜனாதிபதிகளின் ஆடம்பர வீடுகளை மீளப் பெற தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை எதிர்க்க முடியுமா? அரசியல் என்பது சிறப்புரிமைகளை எதிர்பார்க்காத மக்கள் தொண்டாக வேண்டும் என்பதை எதிர்க்க முடியுமா? அது மக்கள் தொண்டாக மேற்கொள்ளப்பட்டாலும் அரசியல்வாதிகள் தமது சொந்த செலவில் தொண்டாற்ற வேண்டும் என்றோ பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்றோ கூற முடியாது. எனவே, அவர்கள் குறிப்பிட்ட சம்பளத்தை பெறுவதையோ தங்குமிட வசதியை, வாகனம் ஒன்றை அல்லது பயணச் செலவை பெறுவதையோ எதிர்க முடியாது. ஆனால், ஐந்து வருடங்கள் பதவியில் இருந்தால் ஓய்வூதியம் பெறுவதற்கான பொது மக்களுக்கு இல்லாத உரிமை வழங்கப்பட வேண்டுமா?

சொந்த வீடில்லாத எவரும் இது வரை ஜனாதிபதியாகவில்லை. சந்திரிகாவுக்கு சொந்தமான கொழும்பில் ரொஸ்மிட் பிளேஸில் உள்ள வீட்டை அவர் ஹோட்டல் ஒன்றுக்கு பெருந் தொகை வாடகைக்குக் கொடுத்து விட்டு, பொது மக்கள் பணத்தில் அரச விடுதியொன்றைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார். மைத்திரிபால சிறிசேனவும் சொந்த வீட்டை வைத்துக்கொண்டே அரச விடுதியில் வசிக்கிறார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு தங்காலையில் கால்டன் என்ற பிரசித்தி பெற்ற வீடு இருக்கிறது. பெலியத்தையில் மெதமுலன வளவ்வ என்ற தந்தை வழியாகக் கிடைத்த வீடும் இருக்கிறது. அவ்வாறு இருக்க 350 கோடி ரூபாய் பெறுமதியான அரசுக்குச் சொந்தமான வீடொன்றில் இருக்கிறார். உன்ன உணவின்றி கஷ்டப்படும் மக்களின் வரிப்பணத்திலேயே இவர்களது இந்த ஆடம்பர வாழ்க்கை பராமரிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள 60 பாதுகாப்பு அதிகாரிகளையும் நீக்கத் தயார் என்று ஜனாதிபதி அனுரகுமார கூறியிருப்பது சிறந்த அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதாக அவர் வழங்கியிருக்கும் வாக்குறுதிக்குப் பொருத்தமானதல்ல. முன்னாள் இன்னாள் அரச தலைவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கும் பாதுகாப்பானது ஒருவரின் விருப்பத்தின் படி, அகற்றக் கூடியதல்ல. அது சம்பந்தப்பட்டவருக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள் தொடர்பான உளவுத்துறை மதிப்பீட்டின் படி, வழங்க வேண்டியதாகும்.

மஹிந்தவுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பும் அவ்வாறான மதிப்பீடொன்றின் படியே வழங்கப்பட்டு இருப்பதாயின் ஜனாதிபதி அனுரகுமாரவின் விருப்பத்தின் படி, அதனைக் குறைக்கவோ அகற்றவோ முடியாது.

புலிகளுடனான போரில் மஹிந்த ராஜபக்ஷவின் பங்களிப்பு எத்தகையது என்பது சர்ச்சைக்குரியதாகும். 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடியதை அடுத்தே இறுதி போர் ஆரம்பமாகியது. புலிகள் அணைக்கட்டை மூடிய போது, தாக்குதலை ஆரம்பிப்போம் என்று தாம் உள்ளிட்ட சிலர் கூறியதாகவும் அப்போது மஹிந்த ஆபாசமான வார்த்தையொன்றை கூறி அதனை மறுத்ததாகவும் சம்பிக்க ரணவக்க பிற்காலத்தில் கூறியிருந்தார்.

போர் முடிவடையும் தறுவாயில் இருந்த 2008ஆம் ஆண்டு சீனாவில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றதால், சீனா, இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதை இடை நிறுத்தியது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த மற்றும் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ கையை விரித்ததாகவும் தாம் தமது சொந்த நட்புறவைப் பாவித்து பாகிஸ்தான் இராணுவத் தளபதியிடம் ஆயுதம் பெற்று போரை தொடர்ந்ததாகவும் முன்னாள் இருணுவத் தளபதி சரத் பொன்சேகா நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார்.

ஆயினும், போர் வெற்றியின் பெருமை மஹிந்தவிடமே சென்றடைந்தது. எனவே, மஹிந்தவுக்கு இப்போதும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லை என்று கூற முடியாது. மக்கள் விடுதலை முன்னணியின் முதலாவது கிளர்ச்சியின் போது, கதிர்காமத்தில் பிரேமவதி மனம்பேரி என்ற யுவதி பகிரங்கமாக வீதியில் நிர்வாணமாக்கிக் கொன்றமைக்காக இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு 16 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதில் ஒரு அதிகாரி 16 ஆண்டுகளுக்கு பின்னர் விடுதலையாகி வந்த உடன் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பேராளி ஒருவர் அவரை கத்தியால் குத்தி கொலை செய்தார்.

பாரிய இயக்கம் ஒன்று இல்லாவிட்டாலும், Lone wolf attacks (தனித்த ஓநாயின் தாக்குதல்கள்) எப்போதும் உலகில் எங்கும் இடம்பெறலாம் என்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை அடுத்து அப்போதைய இராணுவத் தளபதி மஹேஷ் சேனாநாயக்க கூறினார். எனவே, மஹிந்தவுக்கு அச்சுறுத்தல் இல்லை என்று கூற முடியாது.

ஆனால், மஹிந்த அதிகாரத்தில் இருந்த போது, அதுபோல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்த இராணுவ அதிகாரிகளின் பாதுகாப்பை அரசியல் காரணத்துக்காக நீக்கி பெரும் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தெற்கிலும் வடக்கிலும் கிளர்சசிக்காரர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டவராக இருந்தார். அவர் ஓய்வு பெற்று ஐ.தே.கவுடன் இணைந்த போது, சந்திரிக்காவின் அரசாங்கம் அவரது பாதுகாப்பை அகற்றியது. மஹிந்தவும் அந்த அரசாங்கத்தின் மூத்த அமைச்சராக இருந்தார். 1999 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் புலிகள் குண்டெறிந்து அல்கம உட்பட எட்டு பேரைக் கொலை செய்தனர்.

அதேபோல, மேஜர் ஜெனரல் ஜானக்க பெரேரவும் புலிகளின் இலக்காக இருந்தார். அவரது படையினர் வெலிஓயாவில் ஒரே நாளில் 350க்கு மேற்பட்ட புலிகளை கொன்றதாகக் கூறப்படுகிறது. அவரும் ஓய்வு பெற்று ஐ.தே.க. அரசியலில் இணைந்தார். அவரது பாதுகாப்பை 2008 ஆம் ஆண்டு மஹிந்த நீக்கினார். புலிகளின் தற்கொலை போராளி ஒருவர் அவரது கூட்டம் ஒன்றை தாக்கி அவர் உள்ளிட்ட 28 பேரை கொன்றார்.

சரத் போன்சேகா போரை வென்ற இராணுவத் தளபதியாவார். அவர் மஹிந்தவுக்கு எதிராக 2010 ஆம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார் தேர்தல் முடிவடைந்த உடன் அவரது பாதுகாப்புக்காக இருந்த 600 படை வீரர்களின் எண்ணிக்கை ஆறாகக் குறைக்கப்பட்டது. இப்போது புலிகள் இல்லை. மஹிந்த தமது பாதுகாப்புக்காக 60 வீரர்கள் போதாது என்கிறார்.

அது பாதுகாப்பு நிபுணர்கள் தீர்மானிக்க வேண்டியதாகும். ஆனால், அவருக்கு 350 கோடி ரூபாய் பெறுமதியான அரச விடுதியொன்று வேண்டுமா?



## வாழ்வியல் தரிசனம்

போருக்குப் போகும் மாவீரர்கள் போல, எதையும் சிந்திக்காமல் சூடான வார்த்தைகளைத் தமக்குப் பிடிக்காதவர்களிடம் அள்ளிவீசுவதுண்டு.

கோபம் ஒருவரை எல்லை மீறும் உணர்வுக்குள் வசப்படுத்திவிடுகின்றது. சினம் ஏற்படுவது இயல்பானது. அதற்காகத் தன்னை மறந்து, தகாத வார்த்தைகளைப் பேசும்போது, அதைக் கேட்ட நபரும் அம்பு போல் பாய்கின்றார்.

ஒரு கணம் அமைதியாகச் சந்தித்தால், சினம் அடங்கிவிடும். மனிதனை மனிதன் வெறுத்தல் தகாது. பிடிக்காதவரிடம் பேசாமல் ஒதுங்குவது நல்லது.

நியாயத்தை எவரும் நிராகரிக்கும் போது, இயல்பான கோபம் வருவதுண்டு. இதற்காகக் கெட்டவர்கள் எல்லோரிடமும் மோத முடியாது.

தவறான நடத்தை உள்ளவர்கள், அதன் பிரதிபலனைப் பெற்றே தீருவார்கள். குரோதம் ஒருபோதும் சந்தோசங்களை உணராது.; அறிவைக் கெடுக்கும். பிறரின் தூற்றுதலுக்கு ஆளாவார்கள்.

வாழும் காலம் பொன்னானது. எனவே, நல்ல வழியில் வாழ்ந்தால், அதுவே நிரந்தர நிம்மதியை அளிக்கும். சினம், நற்குணம் அறியாது.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை புனரமைத்து தாருங்கள்

அராலி பாலத்தில் இருந்து அராலிதுறைக்கு செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று பாரிய சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான வீதியாகக் காணப்படுகிறது.

அத்துடன், 789 வழித்தட பேருந்து பயணிக்கும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகிறது.

கொக்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது.

இந்த வீதியால் அன்றாடம் 789 வழித்தட பயணிகள் சேவை பேருந்து பயணிப்பதுடன், வயோதிகர்கள், பாடசாலை மாணவர்கள், வேலைகளுக்குச் செல்வோர் என பல்லாயிரக்கணக்கானோர் பயன்படுத்தும் இந்த வீதியைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்துப் புனரமைத்துத் தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

- பு.கஜிந்தன்



# முன்னுதாரணமான “நாடாக நாம் மாறலாம்”

ஒருவேளை, நீங்களும் நானும், நாம் அனைவரும் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கும், சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் தொடர்பிலான நவீன உலக அரசியலில் அழியாத முன்னுதாரணமாக நமது தாய்நாட்டை, இந்த இலங்கை நாட்டை மாற்றியமைப்பதற்கான பயணமாக இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இந்த உலகின் செல்வந்த நாடாக மாற முடியாது. என்றாலும், நாம் முயற்சி செய்தால் இந்த உலகத்தில் வளமான தேசிய உயிர்ப்பை தாங்கிக்கொண்டிருக்கும் சமத்துவம் மற்றும் சுதந்திரத்திற்கான முன்னுதாரணமான நாடாக நாம் மாறலாம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் 77ஆவது சுதந்திர தினத்தின் பிரதான வைபவம், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், சுதந்திர சதுக்கத்தில் மிகவும் எளிமையான முறையில், கொண்டாப்பட்டது. தேசிய கொடியை ஏற்றி வைத்ததன் பின்னர், நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இம்முறை நாம் சிறப்பான சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். கடந்த காலத்தைப் பார்த்து சுதந்திர தினத்தைக் கொண்டாடாமல், இம்முறை எதிர்காலத்தை நோக்கியதாகவும், வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் நாட்டின் மத்தியிலும் வாழும் மக்கள் எதிர்கால வளமான இலங்கை நாடு, நவீன இலங்கை தேசம் ஒன்றிற்காகக் கனவு காணும் தருணத்திலேயே நாம் இன்று சுதந்திரத்தைக் கொண்டாடுகிறோம்.

1948 பெப்ரவரி 4 நமக்கான முடிவுகளை நாமே எடுப்பதற்கான அரசியல் சுதந்திரம் நம் நாட்டுக்குக் கிடைத்தது. அந்த சுதந்திரம் வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும், அது முக்கியமானது. அதுவே நமது அரசியல் சுயாதீன தன்மையைப் பெற்ற வரலாற்றின் முதல் தருணம். 1505 முதல் பகுதியளவில் மேற்கத்தேய ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிபணிந்த இந்த நாடு 1815 இல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு முழுமையாக அடிபணிந்தது. அதிலிருந்து விடுபட்டு இன்றைக்கு 77 ஆண்டுகளுக்கு முன்பு இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட இந்நாடு, சுயாதீனமான நாடாக எழுந்து நிற்பதற்குத் தேவையான அரசியல் நியதிகளை நிறைவேற்ற ஆரம்பித்ததும் இவ்வாறானதொரு நாளிலாகும். எனவே, இது நாம் கொண்டாட வேண்டிய நாளாகும்.

இந்நாளை நனவாக்க தம் உயிர்த் தியாகம் செய்த அனைத்து வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் நாள் இன்று. சுதந்திரத்தை முழுமையாகப் பெறுவதற்காக 1948ஆம் ஆண்டுக்குப் பின்பும் வீரமிக்க மக்கள் நமது சுதந்திரத்துக்காக மேடு பள்ளம் நிறைந்த பாதையில் பயணித்தனர்.

கிரீடத்திடமிருந்து முழு அரசியல் சுதந்திரம் பெற்ற1972 ஆம் ஆண்டை கடந்து தொடர்ச்சியாக 77ஆவது சுதந்திரத்தைக் கொண்டாடும் இந்தத் தருணம் வரையில் நீண்ட பயணமாக வந்திருக்கிறோம். அந்தப் பயணத்தில்,நாம் அறியாத, நமது சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களின் இரத்தத்தினாலும், வியர்வையினாலும் இன்று வரை பயணித்திருக்கிறோம். அவர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் நமது கௌரவம் உரித்தாகும்.

இன்று, இந்த நாட்டில் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக, இந்த சுதந்திர சதுக்கத்தில் இந்த பெருமைமிக்க தேசியக் கொடியின் முன், சுதந்திரத்தின் எதிர்கால எதிர்பார்ப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வரலாற்றுச் சுமையைத் ஏற்றுக்கொண்ட உங்கள் சகோதரனாக நான் நிற்கிறேன். என்னைப் போன்றே இந்த சுமையைத் தாங்கிக்கொண்டு இந்த நேரத்தில் நீங்களும் என்னுடனும் என்னைச் சுற்றியும் நிற்கிறீர்கள் என்று நம்புகிறேன். நமது பொருளாதார சுதந்திரத்திற்காக, நமது சமூக, கலாசார சுதந்திரத்திற்காக, சுருக்கமாகக் கூறினால்,

நவீன பிரஜைகளாக இந்த நாட்டில் பெருமையுடன் வாழத் தேவையான சுதந்திரத்தை உருவாக்குவதற்காக நாம் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

நீண்ட காலமாகக் காலனித்துவத்துக்கு அடிபணிந்தவர்களாக எம்மை பிரித்து ஆண்ட இன வேறுபாடுகள், மத வேறுபாடுகள், ஜாதி வேறுபாடுகள் மட்டுமன்றி, அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் இடையே, நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர்களிடையே, பயணிகள் மற்றும் பொதுப் போக்குவரத்து நடத்துபவர்களிடையே, அரச ஊழியர்கள் மற்றும் தங்கள் தேவைகளை நிறைவேற்ற வருபவர்களிடையே, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே வேரூன்றியிருக்கும் தவறான எண்ணங்களைக் கழுவி அகற்றி இந்த சமூகத்தைத் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். அதேபோல், நவீன உலகத்திற்கான மனித மாண்பு, அன்பு, கருணை என்பவற்றை மனித தொடர்பாடலின் அடிப்படை என்பதை நமக்கு நாமே வலியுறுத்த வேண்டும்.

மேலும், இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஒருவருக்குக் கிடைக்கும் கௌரவம் மற்றும் அன்பு என்பன



அங்கவீனம், முதுமை, நோய் அல்லது அத்தகைய எந்தவொரு இயலாமை காரணமாகவும் மட்டுப்படுதற்கு இடமளிக்கக்கூடாது. அப்போது மட்டுமே, காலனித்துவ யுகத்திலிருந்து விடுபட்டு 77 ஆண்டுகள் கடந்துவிட்ட ஒரு நாடு என்ற வகையில், சுதந்திரம் குறித்து புதிதாகச் சிந்திக்க முடியும்.

இதன் காரணமாக நாங்கள் அனைவரும் நாட்டிற்கான முழுமையான பொருளாதார, சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை வென்றெடுக்கும் போராட்ட களத்தின் போராட்டக்காரர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த தாய்நாட்டிற்காக நாம் அனைவரும் ஒற்றுமையாகச் சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இந்த பணியில், நம் தேசத்திற்கு உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் பங்குள்ளது. நமது தேசத்திற்கான அறிவை உருவாக்கி எதிர்கால சந்ததியினரை அறிவினால் பூரணப்படுத்தும் ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளது. நமது தேசத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் சுகாதாரப் பணியாளர்களாக உங்களுக்கும் பங்கு உள்ளது. நமது பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகள் என்ற வகையில் உங்களுக்கும் பங்குள்ளது. நம் நாட்டில் வலுவான உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கும், நம் நாட்டை தொழில் மயமாக்கலை நோக்கி இட்டுச் செல்லும், நம் நாட்டின் சேவைப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இந்த அனைவருக்கும் முக்கியமான வகிபாகம் உள்ளது. ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்கள் முதல் மலையகத்தில் தேயிலை பறிக்கும் பெண்கள் வரையிலும், தொலைதூர நாடுகளில் நமக்காக பாடுபடுவோர் வரையிலும், தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் நம் நாட்டை உயர்த்த பாடுபடும், சுற்றுலாத் துறையின் மூலம் நம் நாட்டை உயர்த்த பாடுபடும் உங்கள் அனைவருக்கும் அதில் வகிபாகமொன்று உண்டு.

உலகப் பொருளாதார அமைப்பில் நலிவடையாமல், அதன் ஒவ்வொரு அசைவிலும் நசுக்கப்படும் அடிபணிந்தவர்களாக அன்றி, பொருளாதாரத்துக்குள் நமது சுதந்திரத்தை அடைய வேண்டுமெனில் அனைவரும் ஒன்றுபட்டு இந்த தாய்நாட்டிற்காக அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. அந்த பொருளாதார சுதந்திரத்திற்கான நமது போராட்டத்தில் நமது சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை ஒருபோதும் நாம் இரண்டாம் பட்சமாக பார்க்க நாம் தயாரில்லை.

எனவே, கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியியளர்கள் என்ற வகையில் வெறுப்பு மற்றும் கோபத்தால் மாசுபடுத்தப்பட்ட எமது தேசத்தின் உயிர்ப்பை தூய்மைப்படுத்தி குணப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதில் மதத் தலைவர்களுக்கு பாரிய பொறுப்புள்ளது. மேலும், இந்த நாட்டின் வருங்கால சந்ததியினரை வளர்த்தெடுக்கும் அன்பான தாய்மார் அன்பான தந்தையர் என்ற வகையில் உங்களுக்குச் சிறப்பான பணி உண்டு.

மேலும், நாளை இந்த நாட்டைப் பொறுப்பேற்கத் தயாராகும் கல்வி பயிலும் பிள்ளைகள் என்ற வகையில் உங்களுக்கும் தனித்துவமான பங்கு உள்ளது. இதை நாட்டை அதிகமாக நேசிக்கும் மக்களின் உயிர்த் தியாகம், வியர்வை, இரத்தம் கண்ணீரால் இந்த நாட்டை எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது போன்று எதிர்காலத்தில் அந்த கௌரவப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைப்போம்.

ஆனால் இன்று, 2025 பெப்ரவரி 4ஆம் திகதி 77 ஆண்டுகளுக்குப் பிறகு காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்று தேசிய சுதந்திரத்தைக் கொண்டாடும் உங்களுக்கு நான் ஒன்றை உறுதியளிக்க வேண்டும். நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கப் போகும் நாடு வரலாற்றால் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாடாக அன்றி, நீங்கள் உலக பிரஜையாக வாழ விரும்பும், பிரஜை என்ற உங்கள் கௌரவத்தை மதிப்பளிக்கும், மேம்பட்ட கலாசாரத்துடன் கூடிய ஒரு நாடாக அமையும். மேலும், மனித நாகரிகம் இதுவரை அடைந்துள்ள அறிவியல், தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் சாதனைகள், இந்த இலங்கை நாட்டுப் பிரஜையாக அனுபவிப்பதற்கான உங்களது உரிமையை உறுதிப்படுத்தும் நாடாக அமையும்.

சரித்திரம் நமக்கு வழங்கியிருக்கும் இந்த மாபெரும் வாய்ப்பை நழுவ விட எமக்கு எந்தத் தார்மீக உரிமையும் இல்லை என்பதை இன்று உங்கள் முன் உறுதியாக இவ்வாறு சொல்கிறேன். நாம் அவ்வாறு செய்யவில்லை என்பதற்கு எதிர்காலம் சாட்சியமளிக்கும். மேலும், நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கும் இந்த அன்பான தாய்நாட்டை நீங்கள் எங்களை விட அதிக அன்புடனும் ஆற்றலுடனும் எதிர்காலத்திற்கு எடுத்துச் செல்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த பூமியில் பிறந்த மனிதர்கள் என்ற வகையில், இந்த உலகத்தை உயர்ந்த மனித நேயம் மிக்க இடமாக மாற்றும் பொறுப்பு நமக்கு உள்ளது. அந்த உயர்ந்த மனித நேயத்தை அனைத்து மக்களும் சமமாக உள்வாங்குவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். சுதந்திரத்திற்கான போராட்டம் இந்த பரந்த நோக்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, சுதந்திரத்தின் கனவை ஒன்றாகக் காண்போம். அந்தக் கனவை ஒன்றாக நனவாக்கிக் கொள்வோம்.

ஒருவேளை நீங்களும் நானும், நாம் அனைவரும் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கும், சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் தொடர்பிலான நவீன உலக அரசியலில் அழியாத முன்னுதாரணமாக நமது தாய்நாட்டை, இந்த இலங்கை நாட்டை மாற்றியமைப்பதற்கான பயணமாக இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இந்த உலகின் செல்வந்த நாடாக மாற முடியாது என்றாலும், நாம் முயற்சி செய்தால் இந்த உலகத்தில் வளமான தேசிய உயிர்ப்பைத் தாங்கிக்கொண்டிருக்கும் சமத்துவம் மற்றும் சுதந்திரத்திற்கான முன்னுதாரணமான நாடாக நாம் மாறலாம்.









யாழ்ப்பாணத்தில்...





திருகோணமலையில்...









கல்முனையில்...



ஹட்டனில்...







காரைதீவில்...







# 77ஆவது சுதந்திர தின வைபவங்கள்

நாட்டின் 77ஆவது சுதந்திர தினம், பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாப்பட்டது. பிரதான வைபவம், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது. அரந்தவகையில், நாடளாவிய ரீதியிலும் வைபவங்கள் இடம்பெற்றன. (தமிழ்மிரர் நிருபர்கள்)



கிளிநொச்சியில்...





சம்மாந்துறையில்...





வட்டவளையில்...



வவுனியாவில்...





மன்னாரில்...



கேகாலையில்...

சீனா

## சீனா – அமெரிக்காவுக்கிடையே வர்த்தக போர் ஏற்படும்

# 'அபாயம்'

ட்ரம்பின் வரி நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த சீனா, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மற்றும் எரிவாயுவுக்கு கூடுதல் வரி விதித்துள்ளது.

ட்ரம்பின் வரி விதிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்ட நிலையில், இறுதி நேரத்தில் ஏற்பட்ட உடன்பாடு காரணமாக, மெக்சிகோ மற்றும் கனடா மீதான வரி விதிப்பை மட்டும் ஒரு மாதத்துக்கு ட்ரம்ப் ஒத்திவைத்துள்ளார்.

அதாவது, புலம்பெயர்ந்தோர் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கடுமையாக்க இரு நாடுகளும்



ஒப்பந்தம் மேற்கொண்டதை அடுத்து, அமெரிக்கா சற்று பின்வாங்கியிருக்கிறது.

ஆனால், சீனா மீதான வரி விதிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

தற்போதுள்ள வரிகளுக்கு மேல் கூடுதலாக 10 சதவீத வரியைச் சீனா எதிர்கொள்கிறது. இதனால் அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, வர்த்தக கட்டுப்பாட்டு நடவடிக்கையைச் சீனா ஆரம்பித்து விட்டது.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மற்றும் திரவ இயற்கை எரிவாயுவுக்கு 15 சதவீத கூடுதல் வரியை விதித்துள்ளது. எண்ணெய் மற்றும் விவசாய உபகரணங்களுக்கு 10 சதவீத வரியை விதித்துள்ளது.

சீனாவின் சந்தை ஒழுங்குமுறை நிர்வாகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், விதிமுறைகளை மீறிய அமெரிக்கத் தொழில்நுட்ப நிறுவனமான கூகுள் நிறுவனம் மீது விசாரணை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இரு பெரிய பொருளாதார நாடுகளுக்கிடையே மீண்டும் ஒரு வர்த்தக போர் ஏற்படலாம் என கருதப்படுகிறது.

அமெரிக்கா

## மெக்சிகோவுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி வரியை

### தற்காலிகமாக நிறுத்திய அமெரிக்கா

மெக்சிகோவுக்கு விதிக்கப்பட்ட 25 சதவீத இறக்குமதி வரியைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக, அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியின் வரி விதிப்பு உத்தரவால் உலக அளவில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. உலக அளவில் பங்குச்சந்தை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை, 25 சதவீத இறக்குமதி விதிக்கப்பட்டது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிடம் மெக்சிகோ ஜனாதிபதி குலொயா ஷியின்பனு தொலைபேசியில் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்த பேச்சுவார்த்தையின் போது, மெக்சிகோவிலிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைபவர்களைத் தடுக்கவும், மெக்சிகோவில் இருந்து அமெரிக்காவுக்குப் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என, ட்ரம்பிடம் குலொயா உறுதியளித்தார். மேலும், உடனடியாக மெக்சிகோவின் வடக்கு எல்லையில் அமெரிக்காவை ஒட்டிய பகுதிகளில் 10 ஆயிரம் தேசிய பாதுகாப்புப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் ஜனாதிபதி குலொயா உறுதியளித்தார்.

அமெரிக்கா

## தென் ஆப்பிரிக்காவுக்கான

# நிதியை நிறுத்த அமெரிக்கா திட்டம்



தென் ஆப்பிரிக்காவில் மனித உரிமை மீறல் நடைபெறுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ள ட்ரம்ப், அந்நாட்டுக்கு வழங்கப்படும் நிதியை நிறுத்த திட்டமிட்டு இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ட்ரம்ப் மேலும் கூறியதாவது,

"தென் ஆப்பிரிக்காவில் புதிய நில அபகரிப்பு சட்டம் அமுல்படுத்தப்பட்டு உள்ளது. இதன் மூலம் மிகப்பெரிய மனித உரிமை மீறல் நடைபெறுகிறது. இதற்குத் துணையாக அமெரிக்கா நிற்காது. அந்நாட்டுக்கு வழங்கப்படும் நிதி உதவி நிறுத்தப்படும்" என்று கூறியுள்ளார்.



உத்தரப்பிரதேசம்

## திரிவேணி சங்கமத்தில் மோடி

# இன்று புனித நீராடுகிறார்

உத்தரப்பிரதேசத்தில் நடைபெறும் மகா கும்பமேளாவுக்கு புதன்கிழமை (5) வருகை தரும் இந்தியப் பிரதமர் மோடி, துறவிகளுடன் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகருக்கு இன்று (5) வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடி மகா கும்பமேளாவில் கலந்து கொண்டு திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவார்.

இந்தப் பயணத்தின் போது, பிரதமர் மோடி, மகா கும்பமேளாவில் கலந்துகொள்ளும் கோடிக்கணக்கான யாத்ரீகர்களுக்கான ஏற்பாடுகளை மதிப்பாய்வு செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்தியப் பிரதேசம்

# போபாலில் யாசகம் எடுக்க தடை

மத்தியப் பிரதேச மாநில தலைநகரான போபாலில் யாசகம் எடுப்பதும், யாசகம் போடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை போபால் மாவட்ட ஆளுநர், திங்கட்கிழமை (3) மாலை வெளியிட்டார்.

இதன்படி, போபாலில் இனி யாசகம் போடுபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிச்சை எடுப்பவர்களை மீட்டு, அவர்களைத் தங்க வைக்க போபாலில் உள்ள கோலார் சமூக சுகாதார மையத்தில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், ஆளுநர் கூறினார்.

முன்னதாக கடந்த ஆண்டு இந்தூர் நகரிலும் யாசகம் எடுக்கத் தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## 13ஆவது பாதுகாப்பு சேவைகள் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்

# விமானப்படை அணி வெற்றி





2024/2025 ஆம் ஆண்டுக்கான 13ஆவது பாதுகாப்பு சேவைகள் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி மத்தேகொடவில் உள்ள இலங்கை இராணுவ ஸ்குவாஷ் வளாகத்தில் ஜனவரி 24 முதல் 27 வரை நடைபெற்றது. அதில், விமானப்படை ஸ்குவாஷ் அணி வெற்றி பெற்று, தொடர்ந்து நான்காவது முறையாக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது.

விருது வழங்கும் விழாவில் மேஜர் ஜெனரல் தினேஷ் உடுகம தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, நிகழ்விற்கு பெருமை சேர்த்தார்.

முடிவுகளின் சுருக்கம்

ஆண்கள் ஓபன்

2ஆவது இடம் - AC2UT ஹக்கீம் NSM

3ஆவது இடம் - AC2UT உதந்தா KV

ஆண்கள் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள்

1ஆவது இடம் - கோப்ரல் டி சில்வா HAS

ஆண்கள் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள்

1ஆவது இடம் - ஏர் வைஸ் மார்ஷல் ராஜிந்த் ஜெயவர்தன

ஆண்கள் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்

1ஆவது இடம் - எயார் வைஸ் மார்ஷல் ராஜிந்த் ஜெயவர்தன

2ஆவது இடம் - குரூப் கேப்டன் KAASK முனசிங்க.

# சஞ்சு சாம்சனுக்கு விரல் எலும்பு முறிவு



இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான சஞ்சு சாம்சனுக்கு ஆள்காட்டி விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர், 6 வாரங்கள் எந்தவிதமான போட்டிகளிலும் பங்கேற்க முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை(02) மும்பையில் நடைபெற்ற கடைசி டி 20 கிரிக்கெட் போட்டியின் போது சஞ்சு சாம்சனுக்கு ஆள்காட்டி விரலில் காயம் ஏற்பட்டது.

ஜோப்ரா ஆர்ச்சர் வீசிய பந்து சாம்சனின் கை விரலை தாக்கியது. ஸ்கேன் பரிசோதனையில் அவருக்கு விரலில் எழும்பு முறிவு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. காயம் குணமடைய 6 வாரங்கள் ஆகும் என கூறப்படுகிறது.

# "இருவரும் ஜாம்பவான்கள்"




இந்திய அணி சொந்த மண்ணில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 0-3 என்ற கணக்கில் மோசமாக தோற்றதுடன், ஆஸ்திரேலியாவில் நடந்த டெஸ்ட் தொடரையும் 1-3 என்ற கணக்கில் பறிகொடுத்தது. இவ்விரு தொடரிலும் மூத்த வீரர்கள் அணித்தலைவர் ரோகித் சர்மாவும், விராட் கோலியும் ஓட்டங்கள் எடுக்க முடியாமல் திணறினர்.


ரோகித் சர்மா, விராட் கோலியின் சுமாரான ஆட்டம் சமீபத்திய நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய தொடர்களில் இந்தியாவின் தோல்விக்கு முக்கிய காரணமானது. அதனால் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாமல் இந்தியா வெளியேறியது. அதனால் கடுமையான விமர்சனங்களை அவர்கள் சந்தித்துள்ளனர் .

இந்த நிலையில், விராட் கோலி, ரோகித் சர்மாவுக்கு இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கம்பீர் ஆதரவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது

விராட் கோலியும், ரோகித் சர்மாவும் கிரிக்கெட்டின் ஜாம்பவான்கள். அவர்கள் தங்களது திறமையை யாருக்காகவும் நிரூபித்து காட்ட வேண்டிய தேவையில்லை. தங்களது மகத்தான துடுப்பாட்டத்தால் ரசிகர்களை குதூகலப்படுத்தக்கூடியவர்கள். இன்னும் சில ஆண்டுகள் அவர்கள் விளையாடுவார்கள். ஒரு நாள் கிரிக்கெட்டில் 'சேசிங்' செய்வதில் மிகச்சிறந்த வீரர் விராட் கோலி என்பதை மறந்து விட வேண்டாம். அடுத்து வரும் ஒரு நாள் போட்டிகளில் அவர்கள் அசத்துவார்கள் என்று நம்புகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

## சென்னை ஓபன் டென்னிஸ்:

# முதல் சுற்றில் இத்தாலி வீரர் வெற்றி



சென்னை ஓபன் ஏ.டி.பி. சேலஞ்சர் சர்வதேச டென்னிஸ் போட்டி சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி. ஸ்டேடியத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) தொடங்கியது. முதல் நாளில் தகுதி சுற்று நடந்தது. 2-வது நாளான திங்கட்கிழமை (03) ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இத்தாலி வீரர் ஜாகோபோ பெரெட்டினி, ஜப்பானின் ஜோ ஷிமாபுகுரோ ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் 6-3, 7-6 (4) என்ற செட் கணக்கில்ஜோ ஷிமாபுகுரோவை தோற்கடித்து ஜாகோபோ பெரெட்டினி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## ஐ.எஸ்.எல். கால்பந்து தொடர்

# ஒடிசா–நார்த் ஈஸ்ட் ஆட்டம் 'டிரா'

13 அணிகள் இடையிலான 11ஆவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்நிலையில், இந்த தொடரில் ஒரு லீக் ஆட்டம் நடைபெற்றது.

அதன்படி, புவனேஸ்வரில் தொடங்கிய ஆட்டத்தில் ஒடிசா எப்.சி. நார்த் ஈஸ்ட் யுனைடெட் எப்.சி. அணிகள் மோதின. தொடக்கம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதி ஆட்டம் கோல் ஏதுமின்றி டிராவில் முடிந்தது.

தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி கோல்கள் அடித்தன. இதன் காரணமாக இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்தன. இறுதியில் இந்த ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 05 பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.